செய்தி வெளியீடு எண்: 693 நாள்: 16.10.2017

# மத்திய நிதியாணைய நிதி ஒதுக்கீடு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு ஸ்டாலின் வெளியிட்டுள்ள உண்மைக்கு புறம்பான செய்திக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி அவர்களின் மறுப்பறிக்கை

மத்திய நிதியாணைய நிதி ஒதுக்கீடு குறித்து திமுக செயல் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்களின் அத்தியாவசிய தேவைக்கான மின் கட்டணத்தையும், குடிநீர் கட்டணத்தையும் செலுத்தாமல் மத்திய நிதியாணையம் அளித்துள்ள அடிப்படை மானியத் தொகையை கான்டிராக்டுகள் மற்றும் டெண்டர்களுக்கு முழுவதுமாக பயன்படுத்தப்படுகிறது என்று காழ்ப்புணர்ச்சியுடன் வெளியிட்ட உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுகளை வன்மையாக கண்டிக்கின்றேன்.

மத்திய அரசோ அல்லது மாநில அரசோ ஒரு புதிய திட்டத்தை அறிவிக்கும் போது, அத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்னர் வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்கும். அவ்வாறு வகுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் தான் அத்திட்டம் செயலாக்கப்படும் என்பது நடைமுறை.

வகுக்கப்பட்ட திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடிக்காமல் திட்டத்தை செயல்படுத்தும் போது பல்வேறு தணிக்கைத் தடைகளுக்கும், நிர்வாக ரீதியான நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படும். மேலும், திட்டத்தை செயல்படுத்தும் அலுவலர்களும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்ற நடைமுறைகளை எல்லாம் உணராமல், உள்ளாட்சித் துறை அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும் பணியாற்றிய ஸ்டாலின், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசின் மேல் காழ்ப்புணர்ச்சியுடன் உண்மைக்கு புறம்பான செய்திகளை அவதூறு ஏற்படுத்தும் எண்ணத்துடன் வெளியிட்டுள்ளாார்.

அரசாணை எண்.108, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.24.07.2015–ல் 2015–16 முதல் 2019–20 வரையிலான ஆண்டுகளுக்கு மத்திய நிதியாணையத்தின் நிதி ஒதுக்கீட்டிற்கான பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரசாணையின் அடிப்படையில், 2015–16 மற்றும் 2016–17 ஆம் ஆண்டுகளுக்கு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு அடிப்படை மானியமாகவும், செயல்திறன் மானியமாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வழிகாட்டு நெறிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், (2017–18) 14வது மத்திய நிதிக்குழு மானிய பரிந்துரையின் அடிப்படையில், முதல் தவணைத் தொகையாக மாநகராட்சிகளுக்கு ரூ, 252.79 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.195.91 கோடியும் மாநில அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கான நகர்ப்புர உள்ளாட்சியின் பங்குத் தொகையாகவும் மற்றும் குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகளுக்காகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணத்தை செலுத்தவும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மின்கட்டணத்தை செலுத்தவும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளை மேற்கொள்ளவும், புதிய சாலைகள் அமைத்தல் மற்றும் சாலைகள் சீரமைத்தல், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதான மேம்பாட்டுப் பணிகள், சுடுகாடு மற்றும் இடுகாடுகள் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளவும், அரசாணையின் மூலம் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படியே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்தொகையில் 2017–18ஆம் ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புரச் சாலைகள் உட்கட்டமைப்பு திட்டப் பணிகளை மேற்கொள்ள (TURIP) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையில், தோராயமாக 18 சதவீதம் அளவில் 14வது மத்திய நிதிக்குழு மானியத் தொகையிலிருந்து எடுத்து, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்காக சாலைப் பணிகளை மேற்கொள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டே பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஸ்டாலின் உள்ளாட்சித்துறை அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும் பதவி வகித்தபோது, அப்போது நடைபெறவிருந்த பொதுத் தேர்தலை முன்னிட்டு, அவசரகதியில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் சிறப்புச் சாலை திட்டப்பணிகளை மேற்கொள்ள, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரித்தான மற்றும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய முத்திரைத்தாள் மீதான மிகு வரித் தொகையில், 50 சதவீத தொகையை தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி என வகைப்படுத்தி, அத்தொகையை உள்ளாட்சி அமைப்புகள் சாலை அமைப்பதற்காக மட்டுமே பயன்படுத்துவதற்காக 28.02.2011 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

**2011**ஆம் ஆண்டு மே மாதம் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலை கருத்தில் கொண்டு அவசரகதியில் அரசாணை வெளியிட்டு, தமிழ்நாடு முழுவதும் சாலை அமைக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பது ஸ்டாலின் அவர்களின் மனச்சாட்சிக்குத் தெரியும். இதன் காரணமாக உள்ளாட்சி அமைப்புகள் இத்தொகையை அத்தியாவசிய பணிகளுக்கு பயன்படுத்த இயலாமல் போனதை அனைவரும் அறிவர்.

திமுக ஆட்சி காலத்தில், செயல்படுத்தப்படாமல், வெறும் ஆரவாரத்துடன் அறிவிக்கப்பட்டு நின்றுபோன 8 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றில் விருதுநகர், சேலம், வேலூர், மதுரை, சிவகங்கை, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில், 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 2,936 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இதைத் தவிர, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, வேலூர் ஆகிய 5 மாநகராட்சிகள் மற்றும் ஆம்பூர், ஒசூர், இராஜபாளையம், மற்றும் நாகர்கோவில் ஆகிய 4 நகராட்சிகளில், 2,244 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், குடிநீர்த் திட்டப்பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் குடிநீர் மேம்பாடு மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளால் பாதிப்படைந்த சாலைகளை சீரமைக்க உள்ளாட்சி அமைப்புகளிடம் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதித் திட்டம் (TURIF) தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

14வது மத்திய நிதிக்குழு மானியத் தொகையை அந்தந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அத்தியாவசிய மற்றும் அவசியமான தேவைகளுக்கேற்ப பயன்படுத்திக் கொள்ள முழு அதிகாரம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசின் குறுக்கீடு என்ற பேச்சுக்கே இடமில்லை.

4வது மத்திய நிதிக்குழு மானியத் தொகையை விடுவிப்பு செய்யும்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாகப் படித்துப் பார்த்தால் உண்மை நிலை நன்கு தெரியும்.

திமுக ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக 5 ஆண்டுகளில் வெறும் ரூ.15,964 கோடி மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது,

ஆனால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், குடிநீர் திட்டம், சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்கு பராமரிப்பு, திடக்கழிவு மேலாண்மை போன்ற பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளுக்கு 47,571 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சரித்திர சாதனை படைக்கப்பட்டுள்ளது.

2—ஜி அலைக்கற்றை ஊழலின் மூலம் உலக அளவில் தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் தலைக்குனிவு ஏற்படுத்தியவர்கள் திமுகவினர். சர்க்காரியா ஊழல் போல விஞ்ஞான ரீதியில் ஊழல்கள் புரிவதில் வல்லவர்கள் திமுகவினர். இந்திய வரலாற்றில் ஊழல் காரணமாக கலைக்கப்பட்ட ஒரே ஆட்சி திமுக ஆட்சிதான். எனவே ஸ்டாலினுக்கு ஊழல் பற்றி பேச எவ்வித அருகதையும் கிடையாது. ஊழலில் ஊறிப்போன திமுகவினருக்கு வேண்டுமானால். அரசு நிதியை முறையற்ற முறையில் எப்படி செலவிடுவது எனத் தெரிந்திருக்கலாம்.

மேலும் கோயம்புத்தூரில் குடும்ப விழாவாக கொண்டாடும் வகையில் செம்மொழி மாநாட்டை அறிவித்து, அந்த விழாவை ஆடம்பரமாக நடத்துவதற்காக, மாநில அளவில் ஒதுக்கப்பட்ட பல்வேறு துறைகளின் நிதியை, விதிகளை மீறி ஒதுக்கீடு செய்து, குடும்ப விழாவை ஆடம்பரமாக நடத்தியவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியை குறை கூறும் திமுகவின் செயல் தலைவர் ஸ்டாலின் அவர்களின் திமுக ஆட்சியில் தான் என்பதை நாடே அறியும். குறிப்பாக ஆதிதிராவிடர் நலத்துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதி வேறு துறைக்கு மாற்றப்பட்டது திமுக ஆட்சியில் தான் என்பதை குறிப்பிட்டு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சிததலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக சாலைப் பணியினை ஆரம்பிக்கும் முதல் முடியும் வரை கண்காணிக்க திட்ட மேலாண்மை கலந்தாளுநர் நியமனம் செய்யப்பட்டு, சாலையின் தரம் தரக்கட்டுப்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ள மாநில தரக் கட்டுப்பாட்டு அலுவலர் (State Quality Monitor) உள்ளிட்ட ஐந்து அடுக்குகளாக பரிசோதிக்கப்பட்டு, சாலைகள் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. முதன்முறையாக எல்லா சாலைகளிலும் போக்குவரத்து மேம்பாட்டு திட்டங்களான தெர்மோபிளாஸ்டிக் பெயின்ட்கள், இரவில் மிளிரும் ஸ்டெட்டுகள் போக்குவரத்து சந்திப்புகளில் விபத்தை தடுக்கும் வகையில் மத்திய தடுப்பாண்கள், வண்டிகள் தடம் மாறாமல் செல்லும் வகையில் வழிதட குறியீடுகள், பாதசாரிகளை கவரும் வகையில் வகையில் சாலையின் இரு ஓரங்களிலும் RMC கொண்டு நீர்த்தடம் (Water table) அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களில் வேகமாக செல்வதற்கு ஏற்ற வகையில் இரண்டு 160 மீ.மீ. விட்டமுடைய இணை குழாய்கள் அமைக்கப்பட்டு அவை அழகிய செவ்வக கிரேட்டிங்குகள் மூலம் மூடப்பட்டுள்ளது. இவ்வாறு நவீன உத்திகளை

பயன்படுத்தி சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டிற்காக உலகத் தரத்துடன் அமைக்கப்பட்ட 194 பேருந்து சாலைகளும் மற்றும் அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட அனைத்து பேருந்து சாலைகளும் சென்னை மாநகரில் 100 ஆண்டுகளில் பெய்யாத அளவிற்கு டிசம்பர் 2015 ஆம் ஆண்டு பெய்த மழையிலும், மற்றும் பெருவெள்ளத்திலும் எந்த சேதமும் அடையாமல் இருந்தது. மேலும், அதற்கு அடுத்து வந்த வர்தா புயலின்போதும் மற்றும் மிகக் கடுமையான வெப்ப நிலையிலும் எந்த சேதமும் இல்லாமல் உள்ளது. இதுவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் சாலைகள் மிகவும் தரத்துடன் அமைக்கப்பட்டதற்கு சான்றாகும்.

எனவே மத்திய நிதிக்குழு மானியத் தொகை விடுவிப்பிலும், திட்டப் பணிகளை செயல்படுத்துவதிலும் முறைகேடுகளோ, விதி மீறல்களோ, அரசியல் குறுக்கீடோ எதுவும் இல்லை என்பதையும் தெரிவித்து, அபத்தமான அறிக்கை வெளியிட்டு அவதூறுகளைப் பரப்பிய எதிர்கட்சித் தலைவர் ஸ்டாலினுக்கு எனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட வரலாறு காணாத பெரு வெள்ளத்தின் போதும், 2016ஆம் ஆண்டு ஏற்பட்ட வர்தா புயலின் போதும், மற்றும் 142 ஆண்டுகளில் இல்லாத கடும் வறட்சியிலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு போர்க்கால அடிப்படையில் சிறப்பாக செயல்பட்டு மக்களின் துயரை அறவே துடைத்தது என்பதை நாடே அறியும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் அனைவரும் பாராட்டும் வகையில் மக்கள் நலப்பணிகளை சிறப்பாக ஆற்றிவரும் மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் தலைமையிலான ஆட்சியை பொய்யான புகார்களைக் கூறியும், குறுக்கு வழியில் செயல்பட்டும், அவப்பேறு உண்டாக்கி. முதலமைச்சராக வேண்டும் என பகல் கனவு கண்டு வரும் ஸ்டாலினின் கனவு என்றுமே பலிக்காது.

எஸ்.பி.வேலுமணி
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர்

வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9